# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டு – மதிப்பீட்டுத் தாள்

# 2021 – 2022

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 7

சுட்டெண்:......................................................................

நேரம்: 150 மணித்துளிகள்



TAMIL EDUCATION DEVELOPMENT

TAMIL EDUCATION DEVELOPMENT
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. இறைபணிக்காக வந்து தமிழ்ப்பணி செய்த ஐரோப்பியர்

அ ) வீரமாமுனிவர் ☐ ஆ ) தனிநாயகம்அடிகள் ☐

இ ) தேவநேயப்பாவாணர் ☐ ஈ ) ஆறுமுகநாவலர் ☐

2. போர்க்களத்தில் கொட்டும் முரசு

அ ) கொடைமுரசு ☐ ஆ ) மணமுரசு ☐

இ ) போர்முரசு ☐ ஈ ) பெருமுரசு ☐

3. அழுத என்பது

அ ) பெயரெச்சம் ☐ ஆ ) வினைமுற்று ☐

இ ) வினையெச்சம் ☐ ஈ ) பெயர்ச்சொல் ☐

4. அடாது செய்தவர் படாது படுவர். என்ற பழமொழி கூறும் கருத்து

அ ) வறுமையிலும் செம்மையாய் இரு. ☐

ஆ ) குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும். ☐

இ ) மனநிறைவற்ற நிலை. ☐

ஈ ) தீயன செய்தோர் துன்புறுவர். ☐

5. யாழ்ப்பாண அரசு வலிமை பெற்றிருந்த நூற்றாண்டு

அ ) 13 ☐ ஆ ) 17 ☐

இ ) 16 ☐ ஈ ) 14 ☐

6. சாமரம் என்றால்

அ ) தாமரை ☐ ஆ ) விசிறி ☐

இ ) அறிவு ☐ ஈ ) அழகு ☐

TAMIL EDUCATION DEVELOPMENT தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை TEDC

7. ஒழுக்கம் இல்லாதவனிடம் __________ இருக்காது என வள்ளுவர் கூறுகின்றார்.

அ ) தாழ்வு ☐ ஆ ) மகிழ்வு ☐

இ ) உயர்வு ☐ ஈ ) வாழ்வு ☐

8. பின்வருவனவற்றுள் துளைக்கருவி

அ ) மேளம் ☐ ஆ ) யாழ் ☐

இ ) புல்லாங்குழல் ☐ ஈ ) வீணை ☐

9. அடுக்குத்தொடருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ ) கல்விகேள்வி ☐ ஆ ) இராப்பகல் ☐

இ ) கலகல ☐ ஈ ) ஓடிஓடி ☐

10. இராவணனைக் காட்டிக்கொடுத்த இரண்டகன்

அ ) வீடணன் ☐ ஆ ) இராமன் ☐

இ ) வாலி ☐ ஈ ) கதிர்காமநாயகம் ☐

11. வன்னியின் பழமையான தலைநகரம்

அ ) கந்தரோடை ☐ ஆ ) நாகதீபம் ☐

இ ) பூநகரி ☐ ஈ ) யாழ்ப்பாணம் ☐

12. கரும்பலகை என்ற சொல்லைப் பிரித்து எழுதினால்

அ ) கருமை + பலகை ☐ ஆ ) கரும் + பலகை ☐

இ ) கரிய + பலகை ☐ ஈ ) கரும்பு + பலகை ☐

TAMIL EDUCATION DEVELOPMENT தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை TEDC

13. வள்ளுவர் சினத்துக்கு ஒப்பிடுவது

அ ) வெள்ளத்தை ☐ ஆ ) தீயை ☐

இ ) மழையை ☐ ஈ ) காற்றை ☐

14. கதிரவனை நோக்கியவாறு தவம் கிடக்கும் மலர்

அ ) செவ்வந்தி ☐ ஆ ) முல்லை ☐

இ ) மல்லிகை ☐ ஈ ) சூரியகாந்தி ☐

15. வன்னிப்பெருநிலப்பரப்பு பழந்தமிழர் வாழ்ந்த பகுதியாகும். இது

அ ) மெய்ப்பாட்டுச்சொல்லியம் ☐ ஆ ) வினாச்சொல்லியம் ☐

இ ) ஏவற்சொல்லியம் ☐ ஈ ) கூற்றுச்சொல்லியம் ☐

16. __________ உள்ளவரிடம் செல்வம் சேராது.

அ ) அழுக்காறு ☐ ஆ ) ஏக்கம் ☐

இ ) கல்வி ☐ ஈ ) சினம் ☐

17. பாய்ந்தன என்பது

அ ) ஆண்பால் ☐ ஆ ) ஒன்றன்பால் ☐

இ ) பலர்பால் ☐ ஈ ) பலவின்பால் ☐

18. மாணவர்கள் விளையாட்டுத்திடலுக்கு __________ ச் சென்றனர்.

அ ) அணிஅணியாக ☐ ஆ ) விடிய விடிய ☐

இ ) வீடுவீடாக ☐ ஈ ) மடமட ☐

19. வன்னிக்குறிப்பு என்ற நூலை எழுதியவர்

அ ) றொபேட்நொக்சு ☐ ஆ ) யே.பி.லூயிசு ☐

இ ) ஈ.டபிள்யு அதிகாரம் ☐ ஈ ) லயனல்சரத் ☐

20. விற்றான் என்ற வினைமுற்றின் வினையெச்சம்

அ ) வில் ☐ ஆ ) விற்ற ☐

இ ) விற்று ☐ ஈ ) விற்றவன் ☐

21. நல்லவர்க்குச் செய்த உதவியானது __________ செதுக்கிய எழுத்துப் போல நிலையாக இருக்கும்.

அ ) கல்லில் ☐ ஆ ) நீரில் ☐

இ ) மண்ணில் ☐ ஈ ) நிலத்தில் ☐

22. அன்பரசி பாடலை இனிமையாகப் பாடினாள். இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள செயப்படுபொருள்

அ ) பாடினாள் ☐ ஆ ) பாடலை ☐

இ ) இனிமையாக ☐ ஈ ) அன்பரசி ☐

23. உயிர் எழுத்துகளின் வகைகள்

அ ) 3 ☐ ஆ ) 2 ☐

இ ) 4 ☐ ஈ ) 5 ☐

24. இசைக்கலை பற்றிக் கூறும் நூல்

அ ) நல்வழி ☐ ஆ ) திருக்குறள் ☐

இ ) சிலப்பதிகாரம் ☐ ஈ ) மணிமேகலை ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT
TEDC

25. படித்தான் என்ற வினைமுற்றின் இடைநிலை

அ ) படி ☐ ஆ ) த் ☐

இ ) ஆன் ☐ ஈ ) இன் ☐

26. நாங்கள் எல்லோரும் மகிழ்ச்சியாக விளையாடினோம். இதில் விளையாடினோம் என்பது

அ ) இறந்தகாலம் ☐ ஆ ) நிகழ்காலம் ☐

இ ) முக்காலம் ☐ ஈ ) எதிர்காலம் ☐

27. மூதுரையை எழுதியவர்

அ ) ஔவையார் ☐ ஆ ) திருவள்ளுவர் ☐

இ ) இளங்கோவடிகள் ☐ ஈ ) கம்பர் ☐

28. சாமப்பண் பாடி இறைவனை மகிழ்வித்தவன்

அ ) அதியர்மான் ☐ ஆ ) செங்குட்டுவன் ☐

இ ) இராவணன் ☐ ஈ ) எல்லாளன் ☐

29. கூறிய என்ற பெயரெச்சத்தின் வினையடி

அ ) கூறு ☐ ஆ ) கூற ☐

இ ) கூறினான் ☐ ஈ ) கூறும் ☐

30. வீரபாண்டிய கட்டப்பொம்மன் ஆட்சி செய்த இடம்

அ ) தகடூர் ☐ ஆ ) பாஞ்சாலங்குறிச்சி ☐

இ ) நாஞ்சில் ☐ ஈ ) பறம்புமலை ☐

புள்ளிகள் 30



TAMIL EDUCATION DEVELOPMENT தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை TEDC

**2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

இந்த உலகமானது இயற்கையின் கொடைகளால் நிறைந்துள்ளது. மாந்தன் இப்பூமியில் நீடித்து வாழும் பொருட்டு இயற்கை தன் கொடைகளை வாரி வழங்கியுள்ளது. உண்கின்ற உணவிலிருந்து அருந்துகின்ற குடிநீர் வரை மாந்த வாழ்விற்கு அகத்தியமான அனைத்தையும் இயற்கை அளித்துள்ளது. பரந்து விரிந்த நிலப்பரப்புகளும்; பச்சைப்பசேலென்ற காடுகளும்; எழில் கொஞ்சும் நீர்வீழ்ச்சிகளும்; சலசலத்து ஓடுகின்ற ஆறுகளும் இயற்கையின் கொடைகளாகும். நம் முன்னோர்கள் இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்ந்தனர். ஆனால் இன்று நாம் இயற்கையோடு ஒன்றிணையாமல் செயற்கையோடு பின்னிப் பிணைந்து வாழ்கின்றோம். இத்தகைய வாழ்க்கை எமக்குத் தீங்கைத் தரும். எனவே நாமும் இயற்கையோடு இணைந்து வாழ்வோம்.

1. நம் முன்னோர் எவ்வாறு வாழ்ந்தனர்?

______________________________

2. பச்சைப்பசேலென்று காணப்படுபவை எவை?

______________________________

______________________________

3. இன்று நாம் எப்படி வாழ்கின்றோம்?

______________________________

______________________________

4. இந்த உலகம் எதனால் நிறைந்துள்ளது?

______________________________

5. ஆறுகள் எவ்வாறு ஓடுகின்றன?

______________________________

______________________________

புள்ளிகள் 10

TAMIL EDUCATION DEVELOPMENT TEDC

3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. வன்னியின் அரசகுலமகளிர் ஒருவரின் பெயரைத் தருக.

2. "தமிழுக்குத் தொண்டு செய்தால் அந்தத் தமிழ் உள்ளளவும் வாழ்வோம்" என்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

3. அன்னப்புள்ளின் கற்சிலை எங்கே உள்ளது?

4. திருக்குறளின் வேறு பெயர்களுள் ஒன்றைத் தருக.

5. கயிலைவன்னியனது ஆட்சி எதுவரை பரந்திருந்தது?

6. ஏழிசை பற்றிய செய்திகள் குறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் காணப்படும் இடங்கள் இரண்டைத் தருக.

7. சினங்காத்தலை ஔவையார் இரு சொற்களில் எப்படிக் கூறுகிறார்?

புள்ளிகள் 10

4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.

## பூக்கள்

| காலை | இன்பம் | குடிக்கும் |
|---|---|---|
| செடிகளில் | வண்ண | |

எங்கள் வீட்டுத் தோட்டத்தில்
சின்னச் சின்னச் ______________
வண்ண வண்ணப் பூக்கள்
______________ நேரம் மலர்ந்திடும்

வண்டு வந்து பாட்டுப் பாட
______________ மலர்கள் ஆடுமாம்
தென்றல் வந்து தழுவிச் செல்ல
மகிழ்ந்து ______________ காணுமாம்

தேன் ______________ வண்டுகள்
பசி இழந்து பறந்திட
களிப்படைந்த மலர்களும்
மெல்லச் சிரித்து மகிழுமாம்

புள்ளிகள் 10

TAMIL EDUCATION DEVELOPMENT
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வருவனவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

குணப்பெயர் ______________________

படர்க்கை ______________________

உயர்திணை ______________________

2. பின்வரும் சொற்களின் பொருளைத் தருக.

கழனி ______________

அகத்தியம் ______________

தொல்குடி ______________

3. படி என்ற சொல் பெயராகவும் வினையாகவும் அமையுமாறு சொல்லியங்கள் எழுதுக.

பெயர் ________________________________________

வினை ________________________________________

4. நிகழ்கால இடைநிலைகள் எவை? ______________________

அவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

______________

______________

5. தரப்பட்டுள்ள சொற்களைப் பிரித்து எழுதுக.

கத்தரிக்காய் ________________

தமிழ்ப்பாட்டு ________________

கற்கோவில் ________________

புள்ளிகள் 15

TAMIL EDUCATION DEVELOPMENT
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் நிரப்புக.

1. சிறு துரும்பும் ________________ க் குத்த உதவும்.
   ( பல்லு, பள்ளு )

2. புலவருக்குச் சேரமன்னன் ________________ புரிந்தான்.
   ( பனிவிடை, பணிவிடை )

3. நற்பண்பு உள்ளவரிடம் எல்லோரும் ________________ இருப்பர்.
   ( அன்பாய், அண்பாய் )

4. உழவன் வயலிலுள்ள ________________ ப் பிடுங்கினான்.
   ( கலைகளை, களைகளை )

5. இனவுணர்வுள்ள மாபெரும் ________________ மாற்றானுக்குத் துணை போகமாட்டான்.
   ( வீரன், வீறன் )

புள்ளிகள் 05

TAMIL EDUCATION DEVELOPMENT தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை TEDC

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ வீரஞ்செறிந்த வன்னியும் தமிழரசுகளும்
- ✸ இலக்கிய இன்பம்
- ✸ நண்பர்கள்
    - ➢ நட்பு என்றால் என்ன?
    - ➢ உமது நெருங்கிய நண்பர்களின் பெயர்கள்
    - ➢ அவர்களிடம் உள்ள நற்குணங்கள்
    - ➢ நல்ல நண்பர்களினால் ஏற்படும் நன்மைகள்

புள்ளிகள் 20

TAMIL EDUCATION DEVELOPMENT
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC